# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சு

*நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவில் வகுப்பு II இல் உள்ள நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2007*

நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவில் வகுப்பு II இல் உள்ள நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2008 மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

2. **1 ஆம் வினைத்தின் தடைகாண் பரீட்சை பற்றிய நடவடிக்கை முறையும் பாடவிதானமும்.**- 1 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைப் பாடவிதானம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும் :-

(i) *அலுவலக நிருவாகமும் தாபனவிதிக் கோவையும்* - 3 மணித்தியாலம் (பாட இலக்கம் 1) (இவ்வினாத்தாள் 2 பகுதிகளைக் கொண்டதாகும்) - மொத்தப்புள்ளிகள் 100 ஒவ்வொரு பகுதியிலும் ஆகக்குறைந்தது 20 புள்ளிகளையேனும் பெறுதல் வேண்டும்.

(ii) *அரசாங்க நிதிப் பிரமாணக்குறிப்பு* - 3 மணித்தியாலங்கள் (பாட இலக்கம் 2) மொத்தப் புள்ளிகள் 40

**குறிப்பு.**- (அ) உத்தியோகத்தர் ஒருவர் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் ஒரு தடவை அல்லது பல தடவைகள் தோற்ற முடியும்.

(ஆ) பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒரு வினாத்தாள் தொடர்பில் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

3. **பாடவிதானம்.**- (அ) *அலுவலக நிருவாகமும் தாபனவிதிக் கோவையும் :*

பகுதி I

(1) சம்பளம்
(2) மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாட்களும் விடுமுறை நாட்களுக்கான சம்பளமும் கொடுப்பனவுகளும்
(3) லீவு
(4) புகையிரத ஆணைச்சீட்டு
(5) தீவினுள் அலுவலகப் பிரயாணம், விடுமுறைப் பயணம்
(6) பருவச் சீட்டு
(7) உத்தியோகபூர்வ இல்லம்
(8) சம்பளக் கடனும் முற்பணங்களும்
(9) கடிதத் தொடர்பாடல் முறை

பகுதி II

(10) அலுவலக முறைமைகளின் முக்கியத்துவம்
(11) அலுவலக முறைமை பற்றிய கோட்பாடு
(12) கோவைகள் பேணல்
(13) அஞ்சல் தொடர்பான விடயங்கள்
(14) கோவைகளில் குறிப்புக்களைப் பதிதல்

*(ஆ) நிதிப் பிரமாணக் குறிப்பு :*

(1) திரட்டு நிதி, வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டுத் திருத்தம்
(2) செலவுகள் மற்றும் பதிவழிப்புகள் முதலியன
(3) பிரதான கணக்கீட்டு அலுவலகங்கள், கணக்காளர், வருமானக் கணக்கு அலுவலகர், செலுத்தலுக்கான அதிகாரம் வழங்குதல், அனுமதித்தல், உறுதிசெய்தல் மற்றும் பொறுப்புக்கள் ஒப்படைத்தல்
(4) கட்டுநிதியும் வங்கிக் கணக்கும்
(5) முற்பணக் கணக்கு
(6) விநியோக விடயங்களும் சேவைகளும்
(7) நானாவித விடயங்கள் (நி. பி. கு. 825 முதல் 7855 வரையும் 875 முதல் 893 வரையும்)

4. **2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை பற்றிய நடவடிக்கைமுறையும் பாடவிதானமும்.**- 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைப் பாடவிதானம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும் :

(i) *முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும்* - (காலம் 3 மணித்தியாலம்) (விடய இலக்கம் 3) - மொத்தப் புள்ளிகள் 100

(ii) *பாரிய நீர்ப்பாசன முகாமைத்துவம்* - (காலம் 3 மணித்தியாலம், (விடய இலக்கம் 4) - மொத்தப் புள்ளிகள் 100

**குறிப்பு.**- (அ) இவ்வினாத்தாள்கள் இரண்டையும் இரு தடவைகளில் சித்தியெய்த முடியும்.

(ஆ) பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒரு வினாத்தாள் தொடர்பில் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

***பாடவிதானம் :***

*(அ) முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும்*

(1) முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் பற்றிய வரலாற்று ரீதியான பரிணாமம்
(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், தரப்படுத்தல்
(3) மேற்பார்வை, தொடர்பாடல் மற்றும் நிருவாகம்

*(ஆ) பாரிய நீர்ப்பாசன முகாமைத்துவம்*

(1) இலங்கையின் நீர்ப்பாசன முகாமைத்துவத்தின் வரலாற்று ரீதியான பரிணாமம்
(2) பங்குபற்றல் முகாமைத்துவ அணுகுமுறை
(3) நீர்ப்பாசனம் பற்றிய சட்டதிட்டங்கள், நடைமுறைகள் மற்றும் செயற்படுத்துகையில் எழும் பிரச்சினைகள்
(4) நிறுவன அபிவிருத்தி

**கவனிக்க வேண்டியது.**- தேவையாயின் இம்முறை நடைபெறும் இரண்டு வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளுக்கும் ஒரே தடவையில் தோற்ற முடியும். அது பற்றி தகவல்களை உள்ளிட்டு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பூர்த்தி செய்து சமர்ப்பித்தால் போதுமானதாகும்.

5. இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப பரீட்சார்த்திகளால் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஏ4 அளவான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் பரீட்சார்த்தியினால் விண்ணப்பப்படிவங்கள் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது.

மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள தலைப்பு இலக்கம் 1 முதல் 5 வரையான விடயங்கள் கடதாசியின் முதலாவது பக்கத்திலும் எஞ்சிய ஏனைய விடயங்கள் கடதாசியின் இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் விபரங்களைத் தனது கையெழுத்தினாலேயே தெளிவாக நிரப்புதலும் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் பூரணமற்ற தகவல்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் அந்த விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றைத் தன்வசம் வைத்துக்கொள்ளுதல் சிறந்ததாகும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பான பரீட்சையின் பெயரைச் சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இன்னும் தமிழ் மொழியிலான விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அவசியமாகும். மேலும் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சார்த்தி சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகின்றேன்.

6. விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதி திகதியான திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரியை வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுகொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

7. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- பரீட்சை நடைபெறும் தினம் பரீட்சை மேற்பார்வையாளர் முன்னிலையில் பரீட்சார்த்தியொருவர் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) ஆட்கள் பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).

8. இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பிறப்பிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் ஒழுகி நடக்கவும் வேண்டும்.

9. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள தனது திணைக்களத்தின் அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் அலுவலக விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பரீட்சை ஆரம்பிக்கப்படும் தினத்தில் பரீட்சார்த்தி தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வை யாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட உடன் அது பற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் ஆகியும் பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லையாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். இத்தகைய சந்தர்ப்பத்தில் விண்ணப்பகாரர்கள் தம் வசம் வைத்துக்கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதிகள், பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், இன்னும் கொழும்பிற்கு வெளியே வசிக்கும் பரீட்சார்த்திகளாயின் அனுமதி அட்டையை அனுப்பி வைக்கக்கூடிய தொலைநகல்களையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தின் பிரதியைத் தன் வசம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியப்படுத்துவது மிகவும் பயனுள்ளதாகும்.

ஏ. பி. ஆர். ஜயசிங்க,
பணிப்பாளர்,
நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவப் பிரிவு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சு**

*நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவில் வகுப்பு II இல் உள்ள நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 1 ஆம் மற்றும் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2007*

First and Second Efficiency Bar Examination for Institutional Development Officers of the Irrigation Management Division - 2007

தோற்றும் பரீட்சை : [ ]

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]
(சிங்களம் - 2, தமிழ் - 3)
உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.

1 ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 1 [ ]
2 ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2
இரண்டு பரீட்சைக்கும் -3 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்): (உ-ம் : SILVA, A.B.) :-----.

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2. அலுவலக முகவரி : (இந்த முகவரிக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்)
ஆங்கிலத்தில் :-----.
சிங்களத்தில்/ தமிழில் :-----.

3. பால் :-
பெண் - 1, ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக.)

4. தோற்றும் பாடம்/பாடங்கள் :-

பாட இலக்கம் [ ] பாடம்:....................................
பாட இலக்கம் [ ] பாடம்:....................................
பாட இலக்கம் [ ] பாடம்:....................................
பாட இலக்கம் [ ] பாடம்:....................................

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. பிறந்த திகதி :-
வருடம் : மாதம் : திகதி :

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :-
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

8. பதவிப் பெயர் :-----.

மேலே வழங்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்ற உரித்துண்டு எனவும் நான் உறுதி மொழிகின்றேன். மேலும், பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு ஒழுகி நடக்கவும் உடன்படுகின்றேன்.

...................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

மேலே கையொப்பமிட்டுள்ள திரு./திருமதி/செல்வி ................. ............................................................... அவர்களினால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், அவர் பரீட்சைக்குத் தோற்றத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

...............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :-----.

**கவனிக்க வேண்டியது**.- தலைப்பு இலக்கம் 1 முதல் 5 விடயங்கள் கடதாசியின் முதற் பக்கத்திலும் ஏனைய விடயங்கள் அதே கடதாசியின் மறு பக்கத்திலும் அமையும் வண்ணம் விண்ணபப்பபடிவங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

11-996

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.